கொடுத்துள்ளோம். இதிலே சென்ற ஆண்டு எடுத்தவைகளையும், அதே போல இந்த ஆண்டு எடுத்திருக்கின்ற அனைத்தையும் முடித்து, இன்றைக்கு 43 அறிக்கைகளையும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாசியோடு இப்பேரவையிலே அளிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாராட்டுக்கள்.

(உ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர்.

மாண்புமிகு திரு. ச. காந்திராஜன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1994-95 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினாறாவது, பதினேழாவது மற்றும் பதினெட்டாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஊ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு.கே.கே. சின்னப்பன், அரசு உறுதி மொழிக் குழுவின் தலைவர்.

திரு. கே. கே. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-95 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, பத்தாவது சட்டமன்றப் பேரவை, அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து மூன்றாவது முதல் இருபத்து ஒன்பதாவது வரையிலான அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால், இருபத்து ஒன்பதாவது அறிக்கையை அச்சடித்து அளிக்க இயலவில்லை. இவ்வறிக்கையின் அச்சிடப்படாத நகல்கள், உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சடித்த நகல்கள், பின்னர் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS